பேரூராட்சி அலுவலகம்
வேர்கிளம்பி

ந.க.எண். 136/2022/அ1

நாள் : **22.06.2022**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

2021–2022–ம் வருடம் கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின்(KNMT) கீழ்காணும் வேலை செய்வதற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட இருஉறை முறையிலான ஒப்பந்தங்கள் வேர்கிளம்பி பேரூராட்சி செயல்அலுவலர் அவர்களால் 12/07/2022அன்றுபிற்பகல் 3.00 மணிவரை வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tenders.tn.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாகஎடுத்துக் கொள்ளலாம், இந்தஇணையதள முகவரிகளிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விவரங்களும் பெறலாம்.

**பொதுவான நேரம் மற்றும் நாள்**

| | |
|---|---|
| அ) ஒப்பந்தநமூனாஇறக்கம் செய்தல் | : 12.07.2022 மாலை 3.00 மணிவரை |
| ஆ) ஒப்பந்தப்புள்ளிசமர்பித்தல் | : 12.07.2022 மாலை 3.00 மணிவரை |
| ஈ) தொழில்நுட்பதகுதிஉறைதிறத்தல் | : 12.07.2022 மாலை 3.30 மணிவரை |
| உ) தொழில்நுட்பதகுதிகுழுவில்ஆய்வு | : 13.07.2022 |
| ஊ) விலைப்புள்ளிகள்திறத்தல் | : 14.07.2022 |

### நிபந்தனைகள்

1. ஒப்பந்தப் புள்ளி படிவம் பேரூராட்சி அலுவலகத்தில் 12.07.2022 அன்று பிற்பகல் 3.00 மணி வரை உரியத் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒப்பந்தப் புள்ளிகள் வேலைவிபரம் குறிப்பிட வேண்டும்.
3. மதிப்பீட்டில் 1% டேவணித் தொகையை வங்கி வரைவோலையாக **Executive Officer, Verkilambi Town Panchayat** என்ற முகவரியில் எடுத்து பாரத ஸ்டேட் வங்கி கோதநல்லூர் கிளையில் மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும்.
4. காலம் கடந்துவரும் ஒப்பந்தபுள்ளிகள்ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5. ஒப்பந்தங்கள் பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்றவுடன் வேலைக்கான உத்தரவு வழங்கப்படும்.
6. மின்கலம் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள்கொள்முதல் செய்திட அமைக்கப்பட்ட துணைக்குழுவில் மின்கலம் (Sealed Lead Acid) மூலம் இயங்கும் வாகனத்திற்கு விவரக்குறிப்புகளின்படி (Specifications) வாகனங்கள் இருக்க வேண்டும். மேலும் மின்கலம்

(Sealed Lead Acid) வாகனத்திற்கு ஒரு வண்டியின் அடிப்படை விலை ஜி.எஸ்.டி ( 5 சதவிகிதம்) நீங்கலாக ரூ.1.45 இலட்சம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் இந்த விலைக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்பட வேண்டும்.

7. தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்படும்.
8. தொழில்நுட்ப ஒப்பந்தபுள்ளி திறக்கப்பட்ட பின்னர் உரிய ஆவணங்கள் சரிபார்ப்பு பட்டியலின் படி சரிபார்க்கப்பட்டு, கூர்ந்தாய்வு குழுவினரிடம் (Evaluation Check) சரிபார்ப்பு பட்டியலுடன் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் விலைப்புள்ளிகள் திறக்கப்படும்.
9. தகுதியான ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் 12.07.2022 அன்று மாலை 03.30 மணிக்கு ஆஜராகி இருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
10. வேலை கிடைக்கப் பெற்றவர் 1% கூடுதல் வைப்புத்தொகை ரொக்கமாகவோ வங்கி வரைவோலையாகவோ செலுத்தி ரூ.50/–க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தம் எழுதி வைத்து வேலையை ஆரம்பிக்க வேண்டும்.
11. வேலைகள் தொடர்பாக அரசாணைகள், நடைமுறை விதிகள், திட்ட விதிமுறைகள் மற்றும் பேரூராட்சிகள் இயக்ககத்தின் மூலம் அவ்வப்போது தெரிவிக்கப்படும் அறிவுரைகளை பின்பற்றி பணிகள் மேற்கொள்ள வேண்டும்.
12. மின்கலம் மூலம் (Battery Operated Vehicle) இயங்கும் வாகனங்கள் கொள்முதல் செய்தவுடன் செயற்பொறியாளரால் நேரடியாக ஆய்வு மேற்கொண்டு, துணைக்குழு அனுமதி வழங்கியுள்ள விவரக் குறிப்புகள் (Specifications) மற்றும் விலை விகிதம் (Rate) அடிப்படையில் பரிசீலனை செய்து தகுதி சான்றிதழ் அளித்த பின்பே சம்மந்தப்பட்ட நிறுவனங்களுக்கு உரிய விதிமுறைகளின்படி பட்டியல் தொகை வழங்கப்படும்.
13. உரிய காலத்திற்குள் பொருட்கள் வினியோகம் செய்யாதவர்களுக்கு அபராத நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
14. ஒப்பந்தக்காரர் உரிய தொழிலில் 5 வருடங்கள் பணி செய்ததற்கான தணிக்கையாளர் சான்றொப்பமிட்ட நகல் இணைக்கவேண்டும் (Audited balance sheet for 5 years).
15. அனைத்து சான்றுகளும் சான்றொப்பம் இட வேண்டும்.
16. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் நிறுவனங்களால் அங்கீகாரம் பெற்ற முழு விநியோகஸ்தர்க்கான (Dealership) சான்று இணைக்கப்பட வேண்டும்.
17. தொழில்நுட்ப உறையில் கோரப்பட்டுள்ள சான்றுகள் இணைக்கப்பட வேண்டும். மேற்கண்ட சான்றாவணங்கள் இணைக்கப்படாத ஒப்பந்த புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
18. மற்ற விவரங்கள் அலுவலக நாள்களில் அலுவலக நேரத்தில் நேரில் அறிந்து கொள்ளலாம்..

## பட்டியல்

| சிப்பம். எண் (Package No) | வேலையின்பெயர் | ஒப்பந்த மதிப்பு (ரூ. இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ரூ | வேலை முடிக்கவேண்டிய காலம் | ஒப்பந்தக் காரரின் தகுதி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | மின்கலன் மூலம் இயங்கும் 7 வாகனங்கள் (BOV) சப்ளை செய்தல் ( Recylable **lead-acid** Battery Operated Collection Cart Load Weight 0.40 - 0.60 Ton Capacity, Location tracker, GSM - Sim Tracker Capacity 20 -30- KMS Per Charge With Electric Charger) | 10.85 | 10850 | 8960 | 30 நாட்கள் | |

## சிறப்பு நிபந்தனைகள்

1. ஒப்பந்தக்காரர், இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். டேவணித் தொகை முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் வகுப்புத் தகுதிச் சான்றிதழ், (தகுதி குறைந்த ஒப்பந்ததாரர்க் ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கத் தகுதியற்றவர் ஆவர்). நிதிநிலை அறிக்கை, விற்பனை வரிச் சான்றிதழ் போன்ற விபரங்களை ஒரு உறையில் வைத்து, உறையின் வெளிப்புறத்தில் ``Technical Bid'' என்று குறிப்பிட வேண்டும். மற்றொரு உறையில் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் படிவம் வைத்து அவ்வுறையின் வெளிப்புறத்தில் ``Price Bid'' என்று குறிப்பிட வேண்டும்.
2. முதலில் ``Technical Bid'' என்று குறிப்பிட்டுள்ள உறை பிரிக்கப்பட்டு, அதில் வைக்கப்பட்டுள்ள சான்றிதழ்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தேவையான விவரங்கள் தகுதியாக இருந்தால் மட்டுமே ``Price Bid'' என்று குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டாவது உறை திறக்கப்படும். அவ்வாறு ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாட்டின்படி தகுதியானதாக இல்லையெனில் "Price Bid'' உறை திறக்கப்படாமலே சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திருப்பி அனுப்பப்படும்.
3. வாங்கப்படும் பொருட்கள், வாகனம் மற்றும் இயந்திரங்கள் சப்ளை செய்யும் வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி தாக்கல் செய்வோர் சம்மந்தப்பட்ட வாகனம் அல்லது இயந்திரம் தயாரிக்கும் நிறுவனமாகவோ அல்லது அவற்றின் அங்கீகாரம் பெற்ற விற்பனையாளராகவோ இருத்தல் வேண்டும். இதற்கான ஆவணங்களை தொழில்நுட்ப ஒப்பந்தபுள்ளியுடன் தாக்கல் செய்ய வேண்டும்.

4. அரசு அல்லது அரசு சார்பு நிறுவனங்களுக்கு ஏற்கனவே வாகனம் அல்லது இயந்திரம் சப்ளை செய்ததற்கான முன் அனுபவ சான்றுகளையும் இணைக்கப்பட வேண்டும்.

5. சப்ளை செய்யப்படும் இயந்திரங்கள் இந்திய அரசின் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தால் அங்கீகாரம் பெறப்பட்டமையாக இருக்க வேண்டும்.

6. சப்ளை செய்யப்படும் பொருட்கள் வாகனம் மற்றும் இயந்திரங்கள் இப்பேரூராட்சியின் செயல் அலுவலர், பொறியாளர், பிரிவினர் ஆகியோர்களது ஆய்வுக்கு உட்பட்டது. மேற்படி ஆய்வின் அடிப்படையில் வினியோகம் செய்யப்பட்ட இனங்கள் தரம் இல்லாதது எனவும், திருப்பி இல்லாததெனவும் கருதப்பட்டால் வினியோகம் செய்த நிறுவனத்தின் செலவிலேயே மீள அனுப்பி வைக்கப்படும்.

22/6/2022

செயல் அலுவலர்

**வேர்கிளம்பி முதல் நிலை பேரூராட்சி**

22/06/2022

பெறுநர்: பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
வேர்கிளம்பி பேரூராட்சி. **(அஞ்சல் மூலம்)**

நகல்:–

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள், நாகர்கோவில்
4. இளநிலை பொறியாளர், குலசேகரம் தேர்வு நிலை பேரூராட்சி
5. தலைவர், வேர்கிளம்பி பேரூராட்சி
6. அலுவலக விளம்பரப் பலகைக்கு .